## ரூ. 233 கோடி மதிப்பில் – 133 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகளின் இயக்கம்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

## ரூ.50 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்துப் பணிமனையைத் திறந்து வைத்தார்!





**சென்னை, ஆக. 13 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 49.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்துப் பணிமனையைத் திறந்து வைத்து, 233 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.8.2025) போக்குவரத்து துறையின் சார்பில் சென்னை பெரும்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 49.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து சென்னையின் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில், இரண்டாம் கட்டமாக 233 கோடி ரூபாய் மதிப்பிலான பயணிகளின் தேவைக்காக உயரத்தை குறைக்கும் வசதி கொண்ட 55 புதிய தாழ்தள மின்சார குளிர் சாசாதன பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

சென்னைப் பெருநகர கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ், நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டத்தின் அடிப்படையில் (CCPSUSP), உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) பங்களிப்புடன், சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், 625 தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை மற்றும் தண்டையார்பேட்டை1 உள்ளிட்ட ஐந்து பணிமனைகள் மூலம் 697.00 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மொத்த விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாழ்தள மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள், 30.6.2025 அன்று முதற்கட்டமாக வியாசர்பாடி மின்சாரப் பேருந்துப் பணிமனையைத் திறந்து வைத்து, 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடி அசைத்து, தொடங்கி வைத்தார்கள்.

நேற்று முன்தினம் இரண்டாம் கட்டமாக முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 49.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்து வைத்து, 233 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்து மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் என மொத்தம் 135 பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

மீதமுள்ள பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை மற்றும் தண்டையார்பேட்டை1 ஆகிய மூன்று பணிமனைகளிலும், உரிய கட்டட உட்கட்டமைப்பு (Civil Infrastructure) மற்றும் மின்னேற்றம் (Charger) செய்வதற்குரிய கட்டுமானப் பணிகள் மற்றும் புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்குவதற்கு தேவையான பராமரிப்புக் கூடம், அலுவலக நிர்வாகக் கட்டடம், பணியாளர்கள் ஓய்வறை ஆகியவை புதுப்பிக்கப்பட்டு, புதிய மின்மாற்றிகள் பொருத்துதல் மற்றும் தீயணைக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் நிறுவுதல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் புதிய தாழ்தளப் பேருந்துகளில் உள்ள சிறப்பு அம்சங்கள்:

உலகின் முக்கியமான நகரமாக உருவாகி வரும் சென்னையில் பொதுமக்கள் அனைவரும் பொதுப்போக்குவரத்து வாகனங்களை பயன்படுத்தி போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், 55 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்துகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

தரையில் இருந்து 40 செ.மீட்டர் (400 மி.மீ) உயரம் கொண்ட தாழ்தள மின்சார பேருந்தின் உயரத்தை, தேவையான நேரத்தில் பேருந்து ஓட்டுநர் 25 செ.மீட்டர் (250 மி.மீ) உயரம் வரை குறைத்து மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் பேருந்துகளில் எளிதாக ஏறி, இறங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் எளிதாக அமரும் வகையில் இருக்கைகள் ஒரே சமதளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தாழ்தள மின்சாரப் பேருந்துகளில் இருக்கைகளின் பக்கவாட்டு இடைவெளி 65 செ.மீட்டருக்கு (650 மி.மீ.) பதிலாக 70 செ.மீட்டர் (700 மி.மீ) அகலம் உள்ளதால், நின்று செல்லும் பயணிகளுக்கு வசதியாக இருக்கும்.

மேலும், மகளிருக்குப் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்திடும் வகையில், தாழ்தள மின்சாரப் பேருந்துகளில், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகளில் விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திர பயணச் சீட்டு ரூ.2,000/ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து (KCBT) திருவான்மியூர் செல்லும் 95X வழித்தடத்தில் 10 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையதிலிருந்து (KCBT) - சோழிங்கநல்லூர் செல்லும் 555S வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், தியாகராய நகரிலிருந்து - திருப்போரூர் செல்லும் 19 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், பிராட்வேயிலிருந்து மெரினா கடற்கரை வழியாக - கேளம்பாக்கம் செல்லும் 102 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், சென்னை விமான நிலையத்தில் இருந்து சிறுசேரி ஐ.டி. பூங்கா செல்லும் MAA2 வழித்தடத்தில் 15 ஏ.சி. பேருந்துகள், எம்.ஜி.ஆர். கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து கேளம்பாக்கம் / சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் 570 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 20 ஏ.சி பேருந்துகள் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

மேலும், திருவான்மியூரிலிருந்து சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் 102E வழித்தடத்தில் 5 டீலக்ஸ் பேருந்துகள், அடையாறு பேருந்து நிலையத்திலிருந்து - தாம்பரம் செல்லும் 99 வழித்தடத்தில் 5 டீலக்ஸ் பேருந்துகள், பிராட்வேயிலிருந்து பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புக்கு செல்லும் 102P வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், தியாகராய நகரிலிருந்து பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புக்கு செல்லும் 19AX வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், தாம்பரம் மேற்கு முதல் - சோழிங்கநல்லூர் செல்லும் 99A வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், கிண்டி திரு.வி.க. எஸ்டேட்டிலிருந்து பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புக்கு செல்லும் 119G வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள் என மொத்தம் 80 டீலக்ஸ் பேருந்துகள் மற்றும் 55 குளிர்சாதன பேருந்துகள் என மொத்தம் 135 பேருந்துகளை நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாடு வேகமாக நகரமயமாகி வருவதால் போக்குவரத்தில் பசுமை இல்லா வாயு உமிழ்வு அதிகளவு வெளியேறுகிறது. பொதுப் போக்குவரத்தை மின்மயமாக்குவதன் மூலம் பசுமை இல்லா வாயு உமிழ்வை அதிகரிப்பதை தடுப்பதுடன், சமன் செய்யவும் முடியும். ஒவ்வொரு டீசல் பேருந்தும் ஒரு கிலோ மீட்டருக்கு தோராயமாக 755 கிராம் கார்பன் டை ஆக்சைடை (CO) வெளியிடுகிறது. புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளை பயன்படுத்துவதன் மூலம் கார்பன் உமிழ்வை குறைத்து, காற்றின் தரத்தை கணிசமாக மேம்படுத்தும்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.த.பிரபுசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, இணை மேலாண் இயக்குனர் சி.கு.ராகவன், ஓ.எச்.எம் குளோபல் மொபிலிட்டி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் சௌரப் சௌத்ரி, ஸ்விட்ச் மொபிலிட்டி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மற்றும் அசோக் லேலண்டு தலைமை இயக்க அலுவலர் கணேஷ் மணி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

